ISSN: 2582–5518





# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351

திங்கள் ❖ ஆகஸ்ட். 21, 2023 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 318 ❖ ரூ.10





## 2024 தேர்தலில் 'இண்டியா' கூட்டணி வென்றால் தமிழகத்தில் 'நீட்' இருக்காது

# முதல்வர் உறுதி

**ஒன்றியத்தின் புதிய ஆட்சியில் நீட் தேர்வு நிச்சயம் இருக்காது என்பதை, தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்க வைப்போம். அந்த வலிமையும் உறுதியும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு.**



**சென்னை, ஆக. 21-**

**"2024 மக்களவைத் தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் 'இண்டியா' கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு நிச்சயம் தமிழகத்தில் இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கிறேன்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.**

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், "மாணவர்களின் மருத்துவக் கல்லூரி கனவைச் சிதைக்கும் நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசைக் கண்டித்தும், அதற்குத் துணைபோகும் ஆணவம் பிடித்த ஆளுநரைக் கண்டித்தும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் நடத்தப்பட்ட உண்ணாநிலை அறப்போராட்டம் மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது.

காலை தொடங்கி மாலை வரையிலான இப்போராட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர்கள், கழக உடன்பிறப்புகள், அணிகளின் செயல்வீரர்கள், அமைச்சர்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மட்டுமல்லாமல் ஏராளமான இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர், பொதுமக்கள் பங்கெடுத்திருப்பதையும் ஊடகங்களின் வாயிலாகப் பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன்.

நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது அரசியல் கோரிக்கையல்ல; அது கல்விக் கோரிக்கை. அதிலும் குறிப்பாக, சமூகச் சமத்துவக் கல்வியை விரும்பும் அனைவரது கோரிக்கை. நீட் தேர்வை விலக்க வேண்டும் என்ற கோரிக்கையானது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியின் கோரிக்கையல்ல; அனைத்து மக்களின் கோரிக்கையாகவும் இன்று மாறி இருக்கிறது.

நீட் தேர்வு அறிமுகம் செய்யப்பட்ட காலத்தில் எதிர்த்தது நாம் சிலர்தான். ஆனால், இன்று இத்தேர்வின் கொடூரத் தன்மையை அனைவரும் அறிந்து விட்டார்கள். அதனால்தான் கட்சி எல்லைகளைக் கடந்து இத்தேர்வுக்கு எதிரான முழக்கம் நாடு முழுவதும் கிளம்பி வருகிறது. இவர்களது ஆதரவையும் சேர்த்து இப்போராட்டம் வெளிப்படுத்திவிட்டது.

மிக உறுதியாகக் கூறுகிறேன், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் பங்கெடுக்கும் 'இண்டியா' கூட்டணி வெற்றி பெற்றால், நீட் தேர்வு நிச்சயம் தமிழ்நாட்டில் இருக்காது என்ற உறுதியை நான் அளிக்கிறேன். ஒன்றியத்தின் புதிய ஆட்சியில் நீட் தேர்வு நிச்சயம் இருக்காது என்பதை, தேர்தல் வாக்குறுதியாகவே அளிக்கவைப்போம். அந்த வலிமையும் உறுதியும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு உண்டு. இப்படி ஒரு வாக்குறுதியை அதிமுகவும் அதன் கூட்டணிக் கட்சியான பாஜகவும் தர முடியுமா?

சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மசோதா ஒன்றிய அரசால் திருப்பி அனுப்பப்பட்ட தகவலையே சட்டமன்றத்திற்குச் சொல்லாமல் வாயைப் பொத்திக் கிடந்தது. தங்களது நாற்காலி காப்பாற்றப்பட்டால் போதும் யார் நாசமானால் என்ன என்று நினைத்து தரையில் விழுந்து கிடந்தார்கள்.

அரியலூர் அனிதா தொடங்கி - குரோம்பேட்டை ஜெகதீஸ்வரன் வரை ஏராளமான மாணவர்களின் உயிரைக் குடித்த நீட் தேர்வு ரத்து செய்யப்படும் வரை எங்களது போராட்டம் ஓயாது. நாடாளுமன்றத்திலும் - சட்டமன்றத்திலும் - மக்கள் மன்றத்திலும் போராடிய நாங்கள், அமைய இருக்கும் புதிய ஒன்றிய ஆட்சியின் மூலமாக வலியுறுத்தி நீட் தேர்வை ரத்து செய்ய வைப்போம்.

என்னைப் பொறுத்தவரையில், நான் நம்பிக்கை இழக்கவில்லை. நீட் என்பது ஏதோ மாற்ற முடியாத அரசியலமைப்புச் சட்டமல்ல. அரசியலமைப்புச் சட்டத்தையே காலில் போட்டு மிதித்தவர்கள் ஒன்றிய பாஜகவினர். எனவே, நீட் தேர்வும் ரத்தாகும். அதனை ரத்து செய்ய வலியுறுத்தும் உண்ணாநிலைப் அறப்போராட்டத்தை மிகச் சிறப்பாக நடத்திய இளைஞரணிச் செயலாளர் தம்பி உதயநிதி, மாணவரணிச் செயலாளர் தம்பி எழிலரசன், மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் ஆகியோருக்கும் இதில் பங்கெடுத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்கள் போராட்டம் நமக்கு மேலும் உறுதியை ஏற்படுத்தி இருக்கிறது. நீட் தடுப்புச் சுவர் உடைபடும் காலம் வெகுதூரத்தில் இல்லை" என்று அவர் கூறியுள்ளார்.




## பாஜக பிரமுகரின் செயல்பாடு: புதுகையின் அரசியல் நாகரீகம் மன்னர் கல்லூரி பேராசிரியர் பெருமிதம்



**புதுக்கோட்டை , ஆக. 21-**

**புதுக்கோட்டை பாரதிய ஜனதா கட்சியின் மாவட்ட நிர்வாகி ஒருவரின் இல்ல திருமண விழா அழைப்பிதழ் அனைவரும் புருவம் உயர்த்தி பார்த்து வியக்கும் அளவிற்கு பெருமையுடன் பேசும் பொருளாக அமைந்துள்ளது.**

இதனை சம்பந்தப்பட்ட நபரின் பெயரை குறிப்பிடாமல் அவர் சார்ந்திருக்கும் இயக்கத்தையும் அடையாளப்படுத்தாமல் சமூக ஊடகங்களில் அனைவரும் யார் அவர் என்ற கேள்வியை எழுப்பும் அளவிற்கு தமக்கே உரிய பாணியில் நாகரிகமாக பதிவு ஒன்றினை புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் 25 ஆண்டு காலம் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கக் கூடிய வரலாற்று துறை பேராசிரியர் விஸ்வநாதன் கீழ்க்கண்டவாறு வெளியிட்டு இருக்கிறார்.

சமயநல்லிணக்கத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டு புதுக்கோட்டை. சத்தியமூர்த்தி சாலையில் மூன்று சமயத்தவரின் வழிபாட்டுத்தலங்களை வரிசையாகக் காணலாம். கிருஸ்துமஸ், ரமலான் விழாக்களின் போது

அந்தந்த வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வாழ்த்துச் சொல்லும் மரபு நீண்டகாலமாக இருந்து வருகிறது. இப்போது அது அரசியல் பக்கமும் வந்திருப்பது பாராட்டுக்குரியது.

சில நாட்களுக்கு முன் ஒரு திருமண அழைப்பிதழைப் பார்த்தேன். வியப்பாக இருந்தது. அது ஒரு அரசியல் பிரமுகர் இல்ல திருமண அழைப்பிதழ். அழைப்பிதழ் நான்கு பகுதிகளாக தெரிகிறது. முதலில் தான் சார்ந்துள்ள கட்சியின் பிரமுகர்களைக் கொண்டு நடக்கும் திருமண நிகழ்வு. கட்சியின் அத்தனை பொறுப்பாளார்களின் பெயர்களும் நேர்த்தியாக பதிவு செய்யப்பட்டுள்ளது. அடுத்தது முந்தைய ஆளும் கட்சியினர் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். அக்கட்சியின் முக்கிய பிரமுகர்கள், பொறுப்பாளர்கள் பெயர்கள் தவறாமல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மூன்றாவதாக இன்றை ஆளும் கட்சி பிரமுகர்கள் சிறப்பு அழைப்பாளர்களாக அழைக்கப்பட்டுள்ளனர். இங்கேயும் நேர்த்தியாக அனைவரின் பெயர்களும் பொறுப்புகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. நான்காவதாக மீண்டும் சிறப்பு விருந்தினர்களாக தொழிலதிபர்கள், பிற கட்சிப் பிரமுகர்கள், கல்வியாளர்கள், பல்வேறு சமூக அமைப்பு தலைவர்கள், வழக்கறிஞர்கள், சமூக ஆர்வலர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள் என்று அனைவரின் பெயர்களும் நல்ல வண்ணத்தில் பதிவிடப்பட்டுள்ளது. இத்தனை பெயர்களையும் சேகரித்து பதிவு செய்யப்பட்டிருப்பதை பாராட்டியே ஆகவேண்டும்.

இங்கே அனைத்துக் கட்சியினரும், சமூகத் தலைவர்களும், எந்தவித மனமார்ச்சர்யத்திற்கும் இடம் கொடாமல் இணைந்திருப்பதுபோல் எல்லா நிலைகளிலும் இணைந்திருந்தால் தமிழகம் நிச்சயம் அமைதியான மாநிலமாகத் திகழும். தமிழகத்தின் அமைதி கருதி புதுகையின் இந்த நற்பண்பை அனைவரும் பின்பற்ற வேண்டும். அதுவே இன்றைய தேவை என்று தனது வருப்பதையும் அதில் தெரிவித்துள்ளார்.

தொழிலதிபர் முருகானந்தம் - முள்ளங்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் காந்திமதி தம்பதியினரின் மகன் கண்ணனுக்கும். கறம்பக்குடி திமுக ஒன்றிய துணை செயலாளர் லட்சுமணன்-அரசுபள்ளி ஆசிரியை அமிர்தவள்ளி தம்பதியினரின் மகள் கிரிஜா ஆகியோரது திருமணத்தை பாஜக மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட முக்கிய பிரதமர் கலந்து கொண்டு செப்டம்பர் மாதம் 3ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை புதுக்கோட்டை மாவட்டம் வெட்டன்விடுதியில் நடத்தி வைக்க உள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் மிகப் பிரமாண்டமாக மாநில மாநாடு நடத்த போவதை போல் நடைபெற்று வருகின்றது.

## நீட் தேர்வை பாஜக ரத்து செய்யாவிடில் தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலில் மண்ணை கவ்வும் அமைச்சர் ரகுபதி

**புதுக்கோட்டை , ஆக. 21-**

நீட் தேர்வை பாஜக அரசு ரத்து செய்யாவிடில் தமிழகத்தில் நாடாளுமன்ற தேர்தலில் மண்ணை கவ்வும் என சட்டத்துறை அமைச்சர் ரகுபதி எச்சரித்தார்.



தமிழகத்தில் நீட் தேர்வை ரத்து செய்யக் கோரியும் கவர்னரை கண்டித்தும் நேற்று புதுக்கோட்டை திலகர் திடலில் உண்ணாவிரத போராட்டம் மாவட்ட செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் நடைபெற்றது.

இதில் தமிழக சுற்றுச்சூழல் அமைச்சர் மெய்யநாதன், எம்எல்ஏ முத்துராஜா, அப்துல்லா எம்பி, நகரச்செயலாளர் செந்தில், மாவட்ட பொருளாளர் லியாகத் அலி, மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் டாக்டர் மு.க.முத்துகருப்பன், மாவட்டத் துணைச் செயலாளர் மதியழகன் ஒன்றிய செயலாளர்கள் ராமகிருஷ்ணன், சந்திரன், முன்னாள் எம்எல்ஏக்கள் பெரியண்ணன் அரசு, கவிதைபித்தன், மாவட்ட அவை தலைவர் அரு.விரமணி, மாற்றுத்திறனாளிகள் ஆணைய உறுப்பினர் ஏகே செல்வம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் அமைச்சர் மெய்யநாதன், மாவட்டச் செயலாளர் செல்லபாண்டியன், எம்எல்ஏ முத்துராஜா உள்ளிட்டோர் நீட் தேர்வால் ஏற்படும் பாதிப்புகளையும் நீட் தேர்வை ரத்துசெய்ய மத்திய அரசை வலியுறுத்தியும் தமிழக ஆளுநரை கண்டித்தும் பேசினார்கள். உண்ணாவிரத போராட்டத்தில் ஆயிரக்கணக்கான கலந்து கொண்டனர். நிறைவாக உண்ணாவிரதத்தை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்துக்கொண்டு நீட் தேர்வால் தமிழக மாணவர்களின் மருத்துவ கல்வி கனவு பொய்த்து போய் உள்ளதாகவும் மத்திய அரசு தேர்வை ரத்து செய்யாவிடில் வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் டெபாசிட் கூட வாங்காமல் மண்ணை கவ்வ வேண்டிய சூழல் பாஜகவிற்கு ஏற்படும் என்று அவர் எச்சரித்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.



# இன்று

# 21-8-23




சர்க்கரை சேர்க்காத கடுங்காப்பி ஜலதோஷத்தை நீக்கும்

சக வருடம் 1945 சிராவணம் 30

| | | | |
|---|---|---|---|
| சோபகிருது ஆவணி 4 | AUG - MON திங்கள் | ஸஃபர் 3 வளர்பிறை 233 / 132 | இராசிபலன் |

வளர். பஞ்சமி 42.38 (மா. 11.11) சித்திரை 56.13 (கா. 04.34) தியாஜ் 14.02 அகஸ் 30.48 சித்த 56.13 மேல் அமிர்த. சுபமுகூர்த்தம். கெருட பஞ்சமி. மதுரை சொக்கநாதர் மாணிக்கம் விற்றருளிய காட்சி. குருக்குத்துறை முருக பெருமான் பவனி. செடி கொடிகள் வைக்க நன்று. சிறிய நகக.

| | நல்லநேரம் | கௌ.ந.நே. | இராகு | குளிகை | எமகண்டம் |
|---|---|---|---|---|---|
| காலை | 9.15-10.15 | 1.45-2.45 | 07.30 | 01.30 | 10.30 |
| மாலை | 4.45-5.45 | 7.30-8.30 | 09.00 | 03.00 | 12.00 |

சூலம் : கிழக்கு; பரிகாரம் : தயிர் | சிம்ம லக்னம் இருப்பு நா. 4 வி. 44 | சந்திராஷ்டமம் உத்திரட்டாதி

கரணம் : 9-10.30 | சூரிய உதயம் : 6.05

நந்தி இருந்து நின்றால் குன்றும் கரையும்

இராசிபலன்: மேஷம் - பயம்; ரிஷபம் - வரவு; மிதுனம் - நன்மை; கடகம் - ஈகை; சிம்மம் - செலவு; கன்னி - ஆதாயம்; துலாம் - நேர்மை; விருச்சி - அச்சம்; தனுசு - லாபம்; மகரம் - தாமதம்; கும்பம் - கவலை; மீனம் - சுகம்

## சிந்திப்போம்.... செயல்படுவோம்

எல்லாம் இருக்கிறது என்று
நம்பிக்கையில் இருப்பவன்
எதுவுமில்லாமல் போனால் இறந்து போவான்;
எதுவுமில்லை என்றாலும்
தன்னம்பிக்கையோடு
இருப்பவன் எல்லாவற்றையும் பெறுபவன் ஆவான்;




# நீட் தேர்வுக்கு எதிராக திமுக நீண்ட சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறது அமைச்சர் துரைமுருகன்



சென்னை, ஆக. 21-

நீட் தேர்வை ரத்துசெய்ய வலியுறுத்தி மதுரை தவிர தமிழ்நாடு முழுவதும் திமுகவினர் உண்ணாவிரத போராட்டம் நேற்று நடைப்பெற்றது. சென்னை வள்ளுவர்கோட்டம் அருகே உண்ணாவிரத போராட்டத்தை அமைச்சர் துரைமுருகன் தொடங்கிவைத்தார். நீட் தேர்வு காரணமாக தமிழ்நாட்டில் உயிரிழந்த 24 மாணவர்களுக்கு அமைச்சர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். நீட் தேர்வுக்கு எதிரான உண்ணாவிரத போராட்டத்தில் அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன், சேகர்பாபு, உதயநிதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

உண்ணாவிரத போராட்டத்தில் மருத்துவர்கள், மருத்துவ மாணவர்கள், செவிலியர்களும் பங்கேற்றனர். மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டங்களை அமைச்சர்கள் தொடங்கி வைத்தனர். ஒன்றிய அரசு, ஆளுநரை கண்டித்து மாவட்ட தலைநகரங்களில் திமுகவினர் நடத்திய உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்க வந்தவர்கள் நீட் தேர்வுக்கு எதிராக பதாகைகளை ஏந்தி வந்தனர். நீட் தேர்வுக்கு எதிராக திமுக மாணவரணி, இளைஞரணி, மருத்துவரணி சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

நீட் தேர்வுக்கு எதிராக திமுக நீண்ட சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறது என்று அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார். அரசியலுக்கு அப்பாற்பட்டு நீட் தேர்வை கல்வியாளர்கள் பலர் எதிர்க்கின்றனர். ஆனால் மோடி அரசு அதனை கண்டுகொள்ளாமல் உள்ளது. ஒட்டுமொத்த இந்தியாவில் நாம் மட்டும்தான் நீட் தேர்வை எதிர்த்து வருகிறோம். ஏனென்றால், இது எதிர்காலத்தை சீரழிக்கும் என்ற வருங்கால சிந்தனை நமக்கு உண்டு என்று அமைச்சர் துரைமுருகன் கூறியுள்ளார்.

ஆதிக்கக்காரர்களால் அமல்படுத்தப்பட்டது நீட் தேர்வு . பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் மருத்துவராகும் வாய்ப்பை நீட் தேர்வால் இழந்துள்ளனர். நீட் தேர்வை ரத்து செய்ய அரசியல்வாதிகள் மட்டுமல்ல கல்வியாளர்களும் ஆதரவு அளித்துள்ளனர். உயிரிழக்கும் மாணவர்களை பற்றி கவலைப்படாமல் நீட் தேர்வை திணிக்கவே ஒன்றிய மோடி அரசு செயல்படுகிறது. நீட் தேர்வு ஒழிந்தது என்பது வரலாற்றில் நிச்சயம் இடம்பெறும் என்று அமைச்சர் துரைமுருகன் தெரிவித்தார்.

# ஆளுநரை தரம் தாழ்ந்து பேசிய உதயநிதி மன்னிப்புக் கேட்க வேண்டும்

## தமிழக பாஜக கொந்தளிப்பு



**சென்னை , ஆக. 21-**

**"குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரை ஒரு மாநில அமைச்சர், முதல்வரின் மகன் தரம் தாழ்ந்து, தரம் கெட்டு பேசுவதா?" என்று தமிழக பாஜக கண்டனம் தெரிவித்துள்ளது.**

இது குறித்து அக்கட்சியின் செய்தித் தொடர்பாளர் நாராயணன் திருப்பதி வெளியிட்டுள்ள அறிக்கையில், *"ஆளுநருக்கு எவ்வளவு திமிர்? எவ்வளவு கொழுப்பு? உங்களுக்கு சவால் விடுகிறேன். தமிழ்நாட்டில் ஏதோவொருதொகுதியில் போட்டியிடுங்கள், உங்களால் ஜெயிக்க முடியுமா? மக்களை சந்தியுங்கள், உங்கள் சித்தாந்தங்களை தமிழக மக்களிடம் சொல்லுங்கள். "செருப்பை கழட்டி அடிப்பாங்க" என்று தமிழக முதல்வரின் மகனும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பேசியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது மட்டுமல்ல அநாகரிகமான அரசியலும் கூட. செருப்பால அடிப்பாங்க என்ற சொல் வன்மத்துக்குரியது, சட்டத்துக்குப் புறம்பானது.*

*ஜெயிக்கவில்லையென்றால் மக்கள் 'செருப்பால் அடிப்பார்கள்' என்று அர்த்தம் என்றால், திமுக எண்ணற்ற கணக்கான தேர்தல்களில் தோல்வியுற்றது உலகத்துக்கே தெரியும். 1980, 1984, 1991 தேர்தல்களில் தோற்ற திமுகவை தமிழக மக்கள் செருப்பால் அடித்தார்கள் என்றால் ஏற்றுக்கொள்வீர்களா? உங்கள் தந்தை கூட தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்றிருக்கிறார். ஆனால், நீங்கள் கேட்ட கேள்வியை இங்கே கேட்டு உங்கள் அளவுக்கு நான் தரம் தாழ்ந்து பேச மாட்டேன். 2001, 2011, 2016 தேர்தல்களில் படு தோல்வியடைந்தீர்களே? மக்கள் திமுகவை செருப்பால் அடித்தார்களா என்று பொருள் கொள்ள வேண்டுமா? 2014-ம் ஆண்டு மக்களைவை தேர்தலில் மக்கள் திமுகவை செருப்பால் அடித்து புறமுதுகிட்டு ஓடச்செய்தார்கள் என்று ஒப்புக்கொள்கிறீர்களா?*

*மக்களின் இவ்வளவு செருப்படியையும் பெற்றுக் கொண்டு தொடர்ந்து திமுக தேர்தல்களில் போட்டியிடுவது கேவலமில்லையா? வெட்கக்கேடு இல்லையா? மானக்கேடு இல்லையா? ஒரு மாநிலத்தின் அமைச்சர், அதிலும் முதல்வரின் மகன், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட ஆளுநரை தரம் தாழ்ந்து தரம்கெட்டு 'செருப்பால் அடிப்பாங்க' என்று பேசியிருப்பது கடும் கண்டனத்துக்குரியதோடு, வன்மையாக கண்டிக்கத்தக்கது. முதிர்ச்சியற்ற, அராஜகமான, அநாகரிகமான, மக்களை தூண்டிவிடும் முறையில் பேசியுள்ள உதயநிதி ஸ்டாலின் மன்னிப்புக் கேட்க வேண்டும். இப்படி தரக்குறைவாக பேசிய அமைச்சரை தமிழக முதல்வர் கண்டிப்பதோடு, அமைச்சரவையிலிருந்து நீக்க வேண்டும்" என்று நாராயணன் திருப்பதி தெரிவித்துள்ளார்.*




## பாகிஸ்தானில் பேருந்து தீ பிடித்து

# எரிந்ததில் 18 பேர் உடல் கருகி உயிரிழப்பு: 13 பேர் படுகாயம்!



பாகிஸ்தான் , ஆக. 21-

பாகிஸ்தான், பஞ்சாப் மாகாணத்தில் பயணிகள் பேருந்து எரிபொருள் டிரம்களை ஏற்றிச் சென்ற நிறுத்தப்பட்ட வேன் மீது மோதியதில் குறைந்தது 18 பேர் உயிரிழந்தனர் மற்றும் 13 பேர் காயமடைந்தனர். 40-க்கும் மேற்பட்ட பயணிகளுடன் கராச்சியிலிருந்து இஸ்லாமாபாத் நோக்கிச் சென்ற பேருந்து கிழக்கு பஞ்சாப் மாகாணத்தின் ஹபிசாபாத் மாவட்டம் பிண்டி பட்டியான் அருகே நேற்று அதிகாலையில் விபத்துக்குள்ளானது.

டீசல் டிரம்களை ஏற்றிச் சென்ற பிக்-அப் வேன் மீது பேருந்து மோதியது, மோதியதன் தாக்கம் மற்றும் எரிபொருளுடன் தொடர்பு கொண்டதால் தீப்பிடித்ததாக முதல்கட்ட விசாரணையில் தெரிவித்துள்ளனர். விபத்து நடந்தபோது லாகூர்-இஸ்லாமாபாத் நெடுஞ்சாலையின் தோளில் வேன் நின்றிருந்தது. பேருந்தில் இருந்து மீட்கப்பட்ட 18 உடல்கள் மோசமாக கருகிவிட்டதாகவும், அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த டிஎன்ஏ சோதனை நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

இரண்டு வாகனங்களின் ஓட்டுநர்களும் இறந்தனர், மீட்கப்பட்ட பயணிகளில் சிலருக்கு பலத்த தீக்காயங்கள் ஏற்பட்டதாகவும், சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் போலீசார் தெரிவித்தனர். இன்ஸ்பெக்டர் ஜெனரல் மோட்டார்வே போலீஸ் சுல்தான் கவாஜா கூறுகையில், பேருந்தின் கண்ணாடிகளில் இருந்து குதித்தவர்கள் பயங்கர விபத்தில் இருந்து தப்பினர்.

மோட்டார்வேயின் பிண்டி பாட்டியன் பிரிவில், எரிபொருள் தொட்டியை ஏற்றிச் சென்ற நிலையான வேன் மீது பேருந்து மோதியது. பேருந்து அதன் பின்பக்கத்திலிருந்து மோதியது மற்றும் இரண்டு வாகனங்களும் உடனடியாக தீப்பிடித்தது, குறைந்தது 18 பயணிகள் தீயில் எரிந்து கருகினர்.

மருத்துவமனை ஊழியர்கள் மற்றும் மீட்புப் பணியாளர்கள் பேருந்து விபத்தில் பாதிக்கப்பட்டவரை பிண்டி பட்டியனில் உள்ள மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார்கள். விபத்தின் போது பேருந்து ஓட்டுநர் தூங்கிவிட்டாரா அல்லது அதிவேகமாகச் சென்றதால் விபத்து ஏற்பட்டதா என்பது விசாரணையில் தெரியவரும் என்றார். பஞ்சாப் காபந்து முதல்வர் மொஹ்சின் நக்வி விபத்து குறித்து வருத்தம் தெரிவித்ததோடு, காயமடைந்தவர்களுக்கு சிறந்த சிகிச்சையை உறுதி செய்யுமாறு சுகாதார அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

# நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தில் திருமணம் முடிந்த கையோடு பங்கேற்ற புதுமண தம்பதி



சென்னை , ஆக. 21-

நீட் தேர்வுக்கு எதிரான திமுகவினரின் போராட்டத்தில் புதுமண தம்பதி பங்கேற்று ஆதரவு தெரிவித்தனர்.

தமிழகத்தில் உள்ள மாவட்ட தலைநகரங்களில் நீட் தேர்வை கண்டித்து திமுக சார்பில் உண்ணாவிரத போராட்டம் நேற்று நடைபெற்றது. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், மா.சுப்பிரமணியன், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் கலந்துகொண்டு போராட்டத்தை தொடங்கி வைத்தனர்.

இந்த போராட்டத்தின் போது திருமண மண்டபத்தில் இருந்து நேராக வந்த புதுமணத் தம்பதிகள் சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நீட் தேர்வுக்கு எதிராக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் உண்ணாவிரத போராட்டத்தில் மணக்கோலத்தில் வந்து ஆதரவு தெரிவித்தனர்.

அதனை தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு பூங்கொத்து கொடுத்து தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துவிட்டு அவர்களுடன் புகைப்படமும் எடுத்துக்கொண்டார். மேலும், நீட் தேர்வுக்கு எதிரான இந்த உண்ணாவிரத போராட்டம் திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பில் நடைபெற்றது.

# அறந்தாங்கி அருகே கணக்கன்வயல் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற மஹா கும்பாபிஷேக விழா



*அறந்தாங்கி,ஆக.21-*

*புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தாலுகா கணக்கன்வயல் கிராமத்தில் அமைந்து அருள்பாலித்து வரும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் திருப்பணிகள் முடிவுற்று கும்பாபிஷேகம் நடத்துவதென அப்பகுதி கிராம மக்களால் முடிவு செய்யப்பட்டது.*

*இதற்காக சிறந்த யாகசாலை அமைத்து கடந்த 19ம் தேதி சனிக்கிழமை கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது, அதனை தொடர்ந்து 2நாட்களாக யாகபூஜை நடைபெற்று வந்தது, விழாவின் முக்கிய நிகழ்வாக நேற்று பல்வேறு பகுதிகளிலிருந்து கொண்டு வரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம்புறப்பாடு நிகழ்வு நடைபெற்றது.*

*அதனை தொடர்ந்து பிரபு அய்யங்கார் தலைமையில் சிவாச்சாரியார்கள் வேதமந்திரங்கள் முழங்க மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது, கும்பாபிஷேகத்தைக் காண திரண்டிருந்த அப்பகுதியை சுற்றியுள்ள கிராம மக்கள், ஆன்மீக மெய்யன்பர்கள் சாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது, ஆவுடையார்கோவில் காவல் துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.*

# பள்ளியில் மனித கழிவு பூசப்பட்ட விவகாரம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்



சென்னை , ஆக. 21-

பள்ளியில் மனித கழிவு பூசப்பட்ட விவகாரமான சமூக விரோத செயல்களில் ஈடுபட்டோரை தண்டிக்க வேண்டும் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் முத்தரசன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

திருவள்ளூர் மாவட்டம் மத்தூர் பள்ளியில் மனிதக்கழிவு பூசப்பட்டது மேலும் அதிர்வுகளை ஏற்படுத்துகிறது. பள்ளிக்கூடத்தை ஆய்வு செய்த போது பல இடங்களில் மனிதக்கழிவு சிதறி கிடப்பதும், மது பாட்டில்கள் பரவிக் கிடப்பதும் தெரியவருகிறது.

அத்துடன் உரிய சுற்றுச்சுவர் இல்லாததால் இரவு நேரங்களில் சமூக விரோத செயல்களும் நடப்பதாக வரும் செய்திகள் கவலையளிக்கிறது. நாட்டிலேயே கல்வித்துறையில் சிறந்தோங்கும் தமிழ்நாட்டின் "கல்வி நற்கூறுகளை" மேலும் முன்னெடுக்க வேண்டுகிறோம். இத்தகைய சமூக விரோத செயல்களில் ஈடுபட்டவர்களை கண்டறிந்து சட்டப்படி அவர்களை தண்டிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்வதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட நல்லாத்தூர் பகுதியில் நேற்று போக்குவரத்து துறை அமைச்சா சந்திர பிரியங்கா மக்கள் சேவை மையம் விழாவில் கலந்து கொண்டு முதல் கட்டமாக பள்ளியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கான இலவச மாலை நேர சிறப்பு வகுப்புகளை துவக்கி வைத்தார்.

# "திமுக ஆட்சி வந்த பிறகுதான் தமிழ்நாட்டில் சாதிய பிரச்னைகள் அதிகரித்துள்ளது"– அண்ணாமலை



திருநெல்வேலி , ஆக. 21-

தமிழ்நாடு பாஜக தலைவர் அண்ணாமலை தமிழகம் முழுவதும் 'என் மண் என் மக்கள்' எனும் பெயரில் நடைபயணம் மேற்கொண்டுள்ளார். 21-ஆம் நாளான நேற்று பாளையங்கோட்டையில் அமைந்துள்ள விடுதலை போராட்ட வீரர் ஒண்டிவீரன் மணிமண்டபத்தில் அவருக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதனைத்தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அண்ணாமலை, "அரசியலில் திமுக தலைவர்கள் குறிப்பாக அவர்கள் சொல்லும் பொய்களை நாம் தோலுரித்துக் காட்டும்போது அதை அவதூறாக பார்க்கிறார்கள். ராமநாதபுரத்தில் பிரதமர் குறித்து முதலமைச்சர் பேசியது அவதூறு இல்லையா? பிரதமரைப் பற்றி மனோதங்கராஜ் புகைப்படம் போட்டு பேசியது அவதூறு இல்லையா? முதலில் மனோதங்கராஜை கைது செய்து உள்ளே போடுங்கள். அதன்பின் என்மீது வழக்கு போடுங்கள்.

இந்தியாவில் எங்கும் நீட்டிற்கான தற்கொலை நடக்காதபோது தமிழ்நாட்டில் மட்டும் அதிலும் திமுக எதிர்க்கட்சியாக இருந்ததில் இருந்து நடக்கிறதென்றால் தற்கொலைக்கு தூண்டிய வழக்கில் முதல் குற்றவாளியாக முதலமைச்சரும் இரண்டாவது குற்றவாளியாக உதயநிதி ஸ்டாலினையும்தான் சேர்க்க வேண்டும். நீட்டில் டாப் 10 இடங்களில் தமிழ்நாட்டில் இருந்து 4 மாணவர்கள் வந்துள்ளார்கள். அப்படி இருக்கும்போது நீட் யாருக்கு எதிரானது.

தென் தமிழகம் வேலைவாய்ப்பின்மை அதிகமாக காணப்படும் இடமாக இருக்கிறது. தொழிற் நிறுவனங்கள் சென்னையை சுத்தி இருப்பதை விட்டுவிட்டு, தொழிற் நிறுவனங்களை அரசு தென் தமிழகத்திற்கு கொண்டு வர வேண்டும். அப்படியானால்தான் இம்மாதிரியான பிரச்னைகள் எல்லாம் தானாக சரியாகிவிடும்.

தமிழகத்தில் சாதிய பிரச்னைகள் அதிகமானது எப்போதென்றால் அது திமுக வந்த பிறகு தான். சாதிப்படங்களை எடுக்கிறார்கள். இவர்களே தயாரிக்கிறார்கள். சாதியில்லை என்று சொல்லிவிட்டு, சாதி ரீதியிலான படங்களை ஏன் எடுக்க வேண்டும். ஒரு படம் சமுதாயத்தை பிரதிபலிக்க வேண்டும். ஆனால் அதிகப்படியான இமேஜை உருவாக்கும்போது அதைப் பார்க்கும் குழந்தைகளுக்கு தாக்கத்தை ஏற்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

# மயிலாடுதுறையில் மத்திய அரசு மற்றும் ஆளுநரை கண்டித்து திமுக இளைஞரணி சார்பில் உண்ணாவிரத போராட்டம்



மயிலாடுதுறை, ஆக- 21:
நீட் தேர்வை ரத்து செய்யாமல் தினிக்கும் மத்திய அரசு மற்றும் ஆளுனரை கண்டித்து மயிலாடுதுறை மாவட்ட திமுக சார்பில் கிட்டப்பா அங்காடி முன்பு திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் உண்ணாவிரத போராட்டம் மாவட்ட திமுக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமையில் நடைபெற்றது.

சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம், நகர செயலர் செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மருது வரவேற்றார். மயிலாடுதுறை பாராளுமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், மாவட்ட துணை செயலர் ஞானவேலன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சத்தியசீலன், ஏ.சி.என். விஜயபாலன், பால. அருள்செல்வன், குத்தாலம் க.அன்பழகன், ஒன்றியக்குழு தலைவர் காமாட்சி மூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் மூர்த்தி, இளையபெருமாள், இமையநாதன், முருகமணி, மங்கை சங்கர், பி எம் அன்பழகன், எம். அப்துல் மாலிக், அமுர்த. விஜயகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மாநிலங்களவைக்குழு தலைவர் எம்.பி. திருச்சி சிவா உண்ணாவிரதத்தை முடித்துவைத்து பேசுகையில் மாநிலங்களின் உரிமையை பறிக்கும் முயற்சியில் மத்திய அரசு தொடர்ந்து செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்றபோது மத்திய அரசுக்கு 97 அதிகாரம். மாநிலங்களுக்கு 66 அதிகாரமும். பொதுவானது (பொதுபட்டியல்) 47 என்று பிரிக்கப்பட்டிருந்தது. மாநிலசுயாட்சிமுறையை பறிக்கும் வகையில் நீட் தேர்வுஅ மைந்துள்ளதால் அதனை எதிர்க்கிறோம்.

மருத்துவம் மாநில பட்டியலிலும், கல்வி பொதுப்பட்டியலில் இருப்பதால் திணறுகிறார்கள். மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா என்று இருந்ததை நேசனல் மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா என்று மாற்றுகிறார்கள். இதனை திருத்துவதற்கான சட்ட மசோதாவை மக்களையில் கொண்டுவந்தபோதும், குடியிரிமை சட்ட திருத்த மசோதா வந்தபோது அதில் இலங்கை அகதிகள், இஸ்லாமியர்களுக்கு குடி உரிமை வழங்க வேண்டுமென்று திருத்தம் செய்யக்கோரினோம் அதற்காக நடந்த வாக்கெடுப்பில் தமிழகத்திற்கு எதிராக வாக்களித்தவர்கள் அதிமுக உறுப்பினர்கள் என்பதை மக்கள் மறந்தாலும் இஸ்லாமியர்கள் மறந்துவிடக்கூடாது.

2024ல் இந்தியா கூட்டணி நிச்சயம் வெற்றிபெற வேண்டும். இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்ததும் நீட் தேர்வு ரத்துசெய்யப்படும். கல்வி மாநில பட்டியலுக்கு மீண்டும் கொண்டுவரப்படும் என்றார். இதில் கட்சி பொறுப்பாளர்கள், தொண்டர்கள் திரளாக கலந்துகொண்டனர். மாணவரணி அமைப்பாளர் செந்தில் நன்றி கூறினார்.



▶ காரைக்கால் மாவட்ட நிர்வாகம் சார்பாக நேற்று முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்ததினம் கொண்டாடப்பட்டது. ஆட்சியர் வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்ட அவரது திருவுருவ படத்திற்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையிலும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மனிஷ் ஆகியோர் முன்னிலையிலும் மலர் தூவி மரியாதை செலுத்தினர். மேலும் சர்வமத பிரார்த்தனைகள் வாசிக்கப்பட்டு தேசபக்தி பாடல்கள் பாடப்பட்டன. நிகழ்ச்சியின் நிறைவாக அமைச்சர் தலைமையில் மத நல்லிணக்க உறுதி மொழியை அனைவரும் எடுத்துக் கொண்டார்கள். இந்நிகழ்வில் காவல் கண்காணிப்பாளர்கள் (வடக்கு) மற்றும் (தெற்கு) மேல்நிலைக் கல்வி துணை இயக்குனர் ராஜேஸ்வரி முதன்மை கல்வி அதிகாரி விஜயமோகனா அரசு மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர். கண்ணகி, மாவட்ட ஆட்சியரின் செயலர் பாலு (என்கிற) பக்கிரிசாமி உள்ளிட்ட அரசு அதிகாரிகள் முக்கிய பிரமுகர்கள், சமாதான கமிட்டி உறுப்பினர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்கள்.



▶ காரைக்கால் மாவட்டம் நெடுங்காடு வட்டார காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தை நெடுங்காடு வட்டார காங்கிரஸ் தலைவர் குலக்குடி மாறன் முன்னிலையில் காரைக்கால் இளைஞர் காங்கிரஸ் தலைவர் ரஞ்சித் தலைமையில் முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஏ.வி.சுப்பிரமணியன் நேற்று திறந்து வைத்தார். இந்த திறப்பு விழாவில் 200க்கும் மேற்பட்ட இளைஞர் காங்கிரஸ் கட்சியினர் கலந்துகொண்டு திறப்பு விழாவின் போது பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடினர். பின்னர் நடைபெற்ற முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாள் விழாவில் முன்னாள் பாரதப் பிரதமரின் ராஜீவ் காந்தியின் நினைவுகள் இந்தக் கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன், மாநிலத் துணைத் தலைவர் பஷீர், முன்னாள் நகராட்சி துணைத் தலைவர் தங்க வடிவேல், ரமேஷ் மற்றும் இளைஞர் காங்கிரசாரும் கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டை ஜெ.ஜெ கல்லூரியில் கல்லூரிகளுக்கு இடையேயான உயிர்தொழில் நுட்பவியல் துறைபோட்டிகள்



புதுக்கோட்டை,ஆக.21-
புதுக்கோட்டை ஜெ.ஜெ. கலை அறிவியல் கல்லூரியின் (தன்னாட்சி) உயிர்தொழில் நுட்பவியல் துறை மற்றும் உயிர்வேதியியல் துறையின் சார்பாக பயோஸ்பார்க்-2023 என்னும் பெயரில் கல்லூரிகளுக்கு இடையேயான இளங்கலை மற்றும் முதுகலை உயிரியல் மாணவர்களுக்கான ஒரு நாள் போட்டியானது நடைபெற்றது.

நிகழ்வின் தொடக்கமாக கல்லூரி முதல்வர் ஜ.பரசுராமன் வரவேற்புரையாற்றினார், கற்பக விநாயகா கல்வி அறக்கட்டளையின் அறங்காவலர் கவிதா சுப்பிரமணியன் குத்துவிளக்கேற்றி விழாவினை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார், மேலும் மாணவர்கள் இதுபோன்ற தளங்களை தொடர்ச்சியாக பயன்படுத்திக்கொண்டு தங்கள் அறிவியல் அறிவை தற்காலத்திற்கேற்ப மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எடுத்துக்கூறினார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை, திருச்சி, மதுரை,தஞ்சாவூர்,சிவகங்கை மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களைச் சேர்ந்த கல்லூரி மாணாக்கர்கள் 196 பேர் பங்கு பெற்றனர். இந்தப் போட்டிகளானது உயிரியல் வினாடிவினா, முகபாவணைகள் மூலம் உயிரியல் கோட்பாடுகளை வெளிப்படுத்துதல், உயிரியல் சம்பந்தமான கோலப்போட்டி, விளம்பரங்கள்மூலம்உயிரியல் நுட்பங்களை விளக்குதல் நெருப்பில்லாமல் ஊட்டமுள்ள உணவுப்பொருட்களை தயாரித்தல், உயிரியல் மாதிரிகளை உருவாக்குதல், உயிரியல் முக்கியத்துவம் உள்ள படகாட்சிகளை வெளிப்படுத்துதல், அதேபோன்றுபுகைப்படங்கள் மூலம் உயிரியல் முக்கியத்துவத்தை விளக்குதல் போன்ற மையக்கருத்துக்களை உள்ளடக்கி இந்தப் போட்டிகளானது நடத்தப்பட்டது.

ஒவ்வொரு போட்டியின் இறுதியிலும் முதல் மூன்று இடங்களை பிடித்த அணிகளானது தேர்வு செய்யப்பட்டு அந்த அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது, மொத்தம் நடைபெற்ற 8 போட்டிகளில் 4 போட்டிகளானது ஒளிவீச்சைப் பயன்படுத்தியும் மீதமுள்ள 4 போட்டிகளானது ஒளிவீச்சைப் பயன்படுத்தாமலும் நடத்தப்பெற்றது, போட்டிகளின் முடிவில் பரிசளிப்பு விழா நடைபெற்றது, இதில் கல்லூரி முதல்வர் ஜ.பரசுராமன் கலந்துகொண்டு போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களை பாராட்டி பரிசளித்து வாழ்த்தினார்.

இந்நிகழ்வில் திருச்சிராப்பள்ளி ஸ்ரீமத் ஆண்டவர் கலை அறிவியல் கல்லூரியின் உயிர்தொழில்நுட்பவியல் துறை மாணவர்கள் ஒட்டுமொத்த புள்ளியின் அடிப்படையில் சாம்பியன்பட்டம் வென்றனர், அதனை தொடர்ந்து புதுக்கோட்டை ஸ்ரீபாரதி மகளிர் கல்லூரியின் உயிர்தொழில்நுட்பவியல் துறை மற்றும் நுண்ணுயிரியல் துறை மாணவர்கள் சார்ந்த அணி இரண்டாம் பரிசு பெற்றனர். மூன்றாம் இடத்தை தஞ்சாவூர், மருதுபாண்டியர் கல்லூரியின் நுண்ணுயிரியல் துறை மாணவர்கள் பங்கு பெற்றனர்.

உயிர்தொழில்நுட்பவியல் துறை தலைவர் கோ.மணிகண்டன் ஒருங்கிணைக்க, உயிர்வேதியியல் துறைத் தலைவர் மு.கனிதா நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது, இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உயிர்தொழில்நுட்பவியல் துறைமற்றும் உயிர்வேதியியல் துறை பேராசிரியர்கள் மற்றும் மாணாக்கர்கள் சிறப்பாக செய்திருந்தனர்

## சென்னை திருவொற்றியூரில் ஆங்கிலேயரால் கட்டப்பட்ட

# பெருமாள் கோவிலில் 20 ஆண்டுகள் கழித்து கும்பாபிஷேகம் ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு



சென்னை,ஆக,21
சென்னை திருவொற்றியூரில் பதினாறாம் நூற்றாண்டில் கெலட் துரை என்ற ஆங்கிலேய கவர்னர் தனது உதவியாளருக்காக கட்டப்பட்ட 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த காலடிப்பேட்டை கல்யாண வரதராஜ பெருமாள் திருக்கோவிலில் 65 அடி உயரத்தில் ஒன்றரை கோடி மதிப்பில் ஐந்து நிலை ராஜகோபுரம் புதியதாக கட்டப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

கடைசியாக பெருமாள் கோவிலில் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு 2003 ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனை அடுத்து பெருமாள் கோவிலில் சிறியதாக இருந்த கோபுரத்தை இடித்து விட்டு கடந்த 2008 ஆம் ஆண்டு புதியதாக 65 அடி உயர ராஜ கோபுரம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டது.

15 ஆண்டுகளாக நடைபெற்று வந்த பணிகள் நிறைவு பெற்று ஒன்றரை கோடி மதிப்பில் ஐந்து நிலை ராஜகோபுரத்திற்கு நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. கடந்த வெள்ளிக்கிழமை யாகசாலை பூஜைகளுடன் தொடங்கப்பட்டு 32 யாக குண்டங்களில் 22 கலச கும்பங்கள் வைத்து யாகசாலை பூஜைகள் நடைபெற்றன பிரம்மாண்ட வடிவிலான யாகசாலைகள் அமைக்கப்பட்டன ஆமை 8 யானை 8 நாகம் ஆதிசேஷன் தாமரை வடிவில் பெருமாள் கலசம் அமைந்திருக்கும் படி யாக சாலைகள் அமைக்கப்பட்டு பூஜைகள் நடைபெற்று வந்தன , மூன்றாம் நாளான நேற்று காலை உக்த ஹோமம் ,கோ பூஜை , வாஸ்துபூஜை பஞ்சகவ்விய ஜனாதி வாசம் உள்ளிட்ட பூஜைகள் நிறைவு பெற்று சாற்று மறையுடன் பூர்ணாகதி நிறைவு பெற்றது.

இதனை அடுத்து சப்த கலசங்களுக்கும் திருமஞ்சன மகா சாந்தி நடைபெற்று அக்னி பிரதிஷ்டை உடன் விசேஷ பூஜைகள் நிறைவு பெற்று பட்டாச்சாரியார்கள் தலையில் கலசங்களை சுமந்து கோவிலை சுற்றி வலம் வந்தனர்

நாதஸ்வர மேளதாளம் ஒலிக்க வேத மந்திரங்கள் முழங்க புனித நீரை ராஜகோபுர கலசங்களுக்கு ஊற்றினர் ஒரே நேரத்தில் கல்யாண வரதராஜ பெருமாள் பெருந்தேதி தாயார் ஆஞ்சநேயர் ஆண்டாள் நவகிரகம் ராமர் சக்கரத்தாழ்வார் உள்ளிட்ட கோபுர கலசங்களுக்கும் புனித நீர் ஊற்றப்பட்டது.

பின்னர் உற்சவமூர்த்தி கருட வாகனத்தில் எழுந்தருள ராஜகோபுரம் திறக்கப்பட்டு பக்தர்கள் தரிசனத்திற்காக உள்ளே அனுமதிக்கப்பட்டனர் பழமையான கோயில் என்பதால் இதில் சுற்று வட்டாரத்தை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் பங்கேற்று கோவிந்தா கோவிந்தா என்ற முழக்கத்துடன் சுவாமி தரிசனம் செய்தனர்.

# ஸ்ரீ ராம் பொறியியல் கல்லூரியில் மாபெரும் ரத்ததான முகாம்




திருவள்ளூர், ஆக, 20 –
திருவள்ளூர் மாவட்டம், வேப்பம்பட்டிலுள்ள ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் சென்னை ரோட்டரி சங்கம் லெஜென்ட் மற்றும் இந்திய தன்னார்வ இரத்த வங்கி ஆகியோர் சார்பில் மாபெரும் இரத்ததான முகாம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவ மாணவியர் மற்றும் பேராசிரியர்கள் பலர் இரத்த தானம் செய்தனர். இந்நிகழ்ச்சிக்கு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் முதல்வர் சி.பி.கார்த்திகேயன் மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகி சுனிதா ராஜ்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியின் ரோட்டரி சங்க ஒருங்கிணைப்பாளர் நந்தகுமார், நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் இராதாகிருஷ்ணன் ஆகியோர் இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்தனர். இந்நிகழ்ச்சியில் ஏராளமான மாணவர்கள், மாணவியர்கள், பேராசிரியர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சின்ன ஆனைக்கோவில் ஸ்ரீ சந்தான கோபாலகிருஷ்ணன் கோவில் கும்பாபிஷேக விழா





தரங்கம்பாடி, ஆக- 21:
மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுகா, மாணிக்கபங்கு ஊராட்சி, சின்ன ஆனைக்கோவிலில் பிரசித்தி பெற்ற ஸ்ரீ சந்தான கோபால கிருஷ்ணன் கோவில் புதிதாக புணரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. முன்னதாக மூன்று கால யாகசாலை பூஜைகள் நடைபெற்று பூர்ணாகதியுடன் கடங்கள் புறப்பட்டு கோவிலை வலம் வந்து பின்னர் கோபுர கலசத்திற்கு புனித நீர் ஊற்றப்பட்டு கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற்றது.

இதில் கோவில் நிர்வாகிகள் ஊர் முக்கியஸ்தர்கள் பொதுமக்கள் மற்றும் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து வழிபட்டனர். பின்னர் சந்தான கோபாலகிருஷ்ணன் சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் செய்து, பலவகை பூக்களால் அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாரதனை நடைபெற்றது. இந்த பகுதியில் இக்கோவில் அமைந்துள்ளது இங்கு சிறப்பு வாய்ந்தது குறிப்பிடத்தக்கது கும்பாபிஷேக் ஏற்பாடுகளை கிராமவாசிகள் சிறப்பாக செய்திருந்தனர். மயிலாடுதுறை மாவட்டத்திலேயே தரங்கம்பாடி தாலுகாவில் தனி கோவிலில் அமைந்துள்ளது சிறப்பு பெற்ற கிருஷ்ணன் கோவிலாக விளங்குகிறது. கும்பாபிஷேக விழாவில் பொறையார் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

# நீட் தேர்வை திணிக்கும் மத்திய அரசை கண்டித்து தென்காசி திமுக மற்றும் வடக்கு மாவட்டம் சார்பில் உண்ணாவிரத அறப்போராட்டம்



தென்காசி, ஆக. 21-
நீட் தேர்வினால் பாதிக்கப்படும் தமிழ்நாட்டு மாணவர்களின் மருத்துவராகும் கனவை சிதைக்கும் நோக்கில் நீட் தேர்வை திரும்ப பெற மறுக்கும் மத்திய அரசையும் ஆளுநரையும் கண்டித்து திமுக தலைவர் மு. க. ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி மாநில இளைஞரணி மாணவரணி மருத்துவ அணி சார்பில் தென்காசி தெற்கு வடக்கு மாவட்ட திமுக இளைஞரணி மாணவரணி மருத்துவர் அணி சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

தென்காசி புதிய பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம், மாவட்டச் செயலாளர்கள் ஜெயபாலன், ராஜா எம்எல்ஏ ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு விருந்தினர்களாக எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் பரந்தாமன் மற்றும் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாநில பொதுச் செயலாளர் கே எம் முகமது அபுபக்கர் ஆகியோர் கலந்து கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை துவக்கி வைத்தனர்,இந்நிகழ்வில் மத்திய அரசை கண்டித்தும், நீட் தேர்வை மத்திய அரசு திரும்ப பெறக் கோரியும் எழுச்சி சிறப்பரைகளும், முழக்கங்களும் எழுப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் தென்காசி நகர செயலாளர் தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், தலைமை செயற்குழு உறுப்பினர் செல்லதுரை, வடகரை பேரூராட்சி மன்றத் தலைவர் ஷேக்தாவூது, தென்காசி நகர்மன்ற துணைத் தலைவர் கே.என். எல்.சுப்பையா, பொதுக்குழு உறுப்பினர் சாமிதுரை, தென்காசி ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர் ஷேக் அப்துல்லா, கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன்ஹபீபுர்ரகுமான், ஆலங்குளம் ஒன்றியக் குழுத் தலைவி எம். திவ்யா மணிகண்டன், சங்கரன்கோவில் ஒன்றியக் குழுத் தலைவி கோமதி சரவணன், மாவட்ட பொருளாளர் ஷெரிப், செயற்குழு உறுப்பினர்கள் சேக் தாவூத், ஜேசுராஜன், மாவட்ட துணை செயலாளர் கென்னடி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் ராஜேஷ்வரன் தென்காசி தெற்கு மாவட்ட இளைஞரணி திமுக அமைப்பாளர் டி.ஆர். கிருஷ்ணராஜா, தென்காசி தெற்கு மாவட்ட மருத்துவ அணி தலைவர் டாக்டர் மாரிமுத்து, தென்காசி தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் அன்பரசன், வடக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் டாக்டர் முத்துக்குமார், வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் முகேஷ், தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் ஜே கே ரமேஷ், வடக்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் உதய குமார் பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் ஏபி அருள், செங்கோட்டை நகர செயலாளர் வெங்கடேசன், திமுக பேரூர் செயலாளர்கள் மேலகரம் இ.சுடலை, குற்றாலம் குட்டி, நகர பொருளாளர் சேக் பரித், இலஞ்சி மு.முத்தையா கடையநல்லூர் யூனியன் துணை சேர்மன் ஐவேந்திரன் தினேஷ்,ஒன்றிய செயலாளர்கள் அழகு சுந்தரம், சீனித்துரை, ரவிசங்கர் மகேஷ் மாயவன், பெரிய துரை, பேரூர் திமுக செயலாளர் சுடலை, முத்தையா பாண்டியன், தெற்கு மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் இசக்கி பாண்டியன், கவுன்சிலர் பொன்செல்வன், கீழப்பாவூர் முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் பொன் அறிவழகன், ஒன்றிய கவுன்சிலர் சுப்புராஜ், ஆய்க்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் சுந்தர் ராஜன், கலை இலக்கிய அணி பிரிவு அமைப்பாளர் வளன் அரசு, மாவட்ட இளைஞரணி முன்னாள் துணை அமைப்பாளர் ஹக்கீம், சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் சரவணன், மாவட்ட விவசாய அணி முத்துராமலிங்கம், மேலகரம் சுடலை, குற்றாலம் குட்டி, துணை அமைப்பாளர் முன்னாள் பேரூர் கழகச் செயலாளர் மாறன், சுதன், செல்வகுமார், ஜோதி, புதூர் செயலாளர் கோபால், தென்காசி 1வது வார்டு செயலாளர் ராமராஜ், 9வது வார்டு ரவி, 22வது வார்டு தங்கப்பாண்டியன், தொண்டரணி இசக்கிதுரை, குத்துக்கல்வலசை கிளைச் செயலாளர் காசிகிருஷ்ணன், கடையநல்லூர் ஒன்றிய செயலாளர் சுரேஷ், நகர செயலாளர் எஸ். அப்பாஸ், திட்டக்குழு உறுப்பினர் முருகன் மைதீன் ஒலி, ராஜ், வேலுச்சாமி, கருப்பண்ணன், குற்றாலம் சுரேஷ், நல்லையா, செய்யது மசூது, விக்ரம் மணிகண்டன், சுரேஷ், வாசு ரூபி பாலசுப்ரமணியம், காசி, முருகையா, காளிமுத்துமற்றும் தென்காசி தெற்கு, வடக்கு மாவட்ட மருத்துவமனை இளைஞர் அணி மாணவர் அணி நிர்வாகிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர் .



▶ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் தனியார் மஹாலில் தமிழக சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு நிச்சயதார்த்த விழாவில் பங்கேற்று, வாசுதேவநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சதன் திருமலை குமார் இல்ல திருமண விழாவில் கலந்து கொண்ட சபாநாயகருக்கு சிறப்பான வரவேற்புஅளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் சங்கரன்கோவில் எம்எல்ஏவும், தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளருமான ராஜா, தெற்கு மாவட்ட திமுக செயலாளர் வே. ஜெயபாலன் மதிமுக துணை பொதுச் செயலாளர் தி.மு. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சித் தலைவர் துரை ரவிச்சந்திரன், மாவட்ட கண்காணிப்பாளர் ஜம்சன், பொதுக்குழு உறுப்பினர் யு.எஸ். டி. சீனிவாசன்,மாவட்ட பொருளாளர் சரவணன், மதிமுக இளைஞரணி அமைப்பாளர் மு. சங்கர் பணகுடி,மற்றும் சங்கரன்கோவில் நகர் மன்றத் தலைவர், நகரச் செயலாளர் பிரகாஷ், பெரியதுரை, எ.அந்தோணிசாமி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் விஜயா சௌந்தரபாண்டியன், ஒன்றிய பிரதிநிதி சுரேஷ்,அரசியல் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



மதுரை கங்கைபுரம் தேவி பேலஸில் மதுரை வடக்கு மாவட்ட திமுக தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கணேசன் - மல்லிகா தம்பதியினர் இல்ல திருமண விழாவில். தமிழக வணிகவரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி கலந்து கொண்டு மணமக்கள் சரவணன், ராகவி ஆகியோரை வாழ்த்தினார். உடன் விக்னேஷ் பாண்டி, லட்சுமி பிரியா, சோழவந்தான் எம்எல்ஏ வெங்கடேசன், இசக்கிமுத்து, புஷ்பராணி, கோபாலகிருஷ்ணன், உமாராணி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழக மதுரை மண்டல செயலாளர் சிறுதூர். உள்ளிட்ட பல்வேறு பிரிவு நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



ஆவணி முதல் ஞாயிற்றுக்கிழமையான நேற்று திருவப்பூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் சந்தன காப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த காட்சி.

## உடையார்பாளையம் அருகே எம் ஆர் சி கல்வி நிறுவனத்தில்

# பேராசிரியர்களுக்கு தலைமைப் பண்புகள் குறித்த கருத்தரங்கம்

அரியலூர், ஆக.21-

உடையார்பாளையம் அருகே எம் ஆர் சி கல்வி நிறுவனங்களில் பணி புரியும் பேராசிரியர்களுக்கு, தலைமை பண்புகள் குறித்த கருத்தரங்கம் நடைபெற்றது



அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் அடுத்துள்ள, தத்தனூர் மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களில் பணி புரியும் பேராசிரியர்களுக்கு, "பேராசிரியர்களுக்கான தலைமைப் பண்புகள்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைப்பெற்றது.

நிகழ்ச்சிக்கு மீனாட்சி இராமசாமி கல்வி நிறுவனங்களின் தாளாளர் எம்.ஆர். இரகுநாதன் தலைமை வகித்தார், கலைக் கல்லூரி முதல்வர் எஸ்..சேகர், எம்.ஆர். பொறியியல் கல்லூரி முதல்வர் ந.மதியழகன், எம்.ஆர்.பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் எஸ். சிவசங்கர், எம்.ஆர். கல்வியியல் கல்லூரி முதல்வர்சம்பத்ஆகியோர் முன்னிலை வகித்தனர், துணை முதல்வர் பி.சங்கீதா வரவேற்று பேசினார்,

இயக்குனர் ஆர். இராசமாணிக்கம் சிறப்புரையாற்றினார், முடிவில் பேராசிரியர் வேல்முருகன் நன்றியுரை கூறினார்.



புதுக்கோட்டை மாவட்டத்தில் மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சியை முன்னிட்டு மாவட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தின் முன்பு அலங்கரித்து வைக்கப்பட்டு இருந்த அவரது திருவுருவ படத்திற்கு மாவட்டத் தலைவர் முருகேசன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் மாநில சிறுபான்மை பிரிவு துணைத் தலைவர் இப்ராஹீம் பாபு, பாருக், தனபதி, தீன், கௌரி, சகாயராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை வெங்கடேஸ்வரா பாலிடெனிக் கல்லூரியில் நடந்த சுதந்திரத் தின விழாவில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் துறையில் பயின்று வரும் மாணவி பி.சுவேதா ,"ஒரே முட்டை ஓட்டில் ஆறு தேசிய தலைவர்களை " குறைந்த நேரத்தில் வரைந்து புதிய உலக சாதனை படைத்துள்ளார். மாணவியின் இந்த சாதனை கலாம் உலக சாதனை -ஆல் அங்கீகரிக்கப்பட்டு உலக சாதனை க்கான சான்றிதழ்,கேடயம் ஆகியவற்றை வழங்கி கவுரவித்துள்ளது, கல்லூரியின் செயலாளர் பி.கருப்பையா, பொருளாளர் ஆர்எம். வி கதிரேசன் ,மாணவிக்கு கேடயம் வழங்கி பாராட்டினர், நிகழ்வில் முதல்வர் ஜீவானந்தம் கல்வியல் கல்லூரி முதல்வர் இளங்கோ ,துணை முதல்வர் திருமலை அரசன் துறைபேராசிரியர்கள் ஆகியோர் மாணவ,மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

# வைரம்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 35-வது விளையாட்டு தின விழா கொண்டாட்டம்

புதுக்கோட்டை, ஆக. 21-

புதுக்கோட்டை வைரம்ஸ் மெட்ரிக்மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டு தின விழா கொண்டாடப்பட்டது. இதில்முதன்மை விருந்தினராக புதுக்கோட்டை துணை காவல் கண்காணிப்பாளர் ராகவி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு தேசிய கொடியேற்றி விழாவினைத் தொடங்கி சிறப்புரையாற்றினார்.



மாணவர்களின் அணிவகுப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி வாகை சூடிய மாணவர்கள் ஒருங்கிணைந்து ஒலிம்பிக் தீபத்தை ஏற்றினர். தொடர் ஓட்டம், ஒட்டப் பந்தயம் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு உடனடியாக பரிசுகளைச் சிறப்பு விருந்தினர் வழங்கினார்.

அனைத்து வகுப்பு மாணவ,மாணவிகளுக்கான விளையாட்டுப் போட்டிகள், பலவிதமான வண்ண மயமான நடனங்கள், கராத்தே மற்றும் சிலம்பம் நிகழ்ச்சிகள், பெற்றோர்களுக்கான போட்டிகள் ஆகியன நடைபெற்றன. இவ்விழாவில் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்குச் சிறப்பு விருந்தினர் பரிசுகளை வழங்கினார்.

இதில்பள்ளியின்தலைவர் தேனாள்சுப்ரமணியன்,பள்ளி நிர்வாக உறுப்பினர்கள், பள்ளியின் ஒருங்கிணைப்பாளர் அஸ்வினி நாச்சம்மை, பள்ளியின் முதல்வர் சிராஜுதீன், ஒருங்கிணைப்பாளர்கள்,ஆசிரியர்கள் ,அலுவலக பணியாளர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு விழாவைக்கண்டு மகிழ்ந்தனர்.

# சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் நினைவு தின நிகழ்ச்சி

சங்கரன்கோவில். ஆக.21-

சங்கரன்கோவில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வைத்து தென்காசி வடக்கு மாவட்ட திமுக சார்பில் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரனின் 252 வது நினைவு தின நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு எழும்பூர் எம்எல்ஏவும், திமுக சட்டத்துறை இணைச் செயலாளருமான பரந்தாமன் எம்எல்ஏ மற்றும் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ ஆகியோர் தலைமை வகித்து அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த ஒண்டிவீரன் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர், இதில் சங்கரன்கோவில் யூனியன் சேர்மன் லாலாசங்கர பாண்டியன் ,மாவட்ட பொருளாளர் சரவணன் ,ஒன்றிய செயலாளர் பெரியதுரை ,நகரச் செயலாளர் பிரகாஷ், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் அழகு துரை ,சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் விஜயபாண்டியன், மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி செயலாளர் முருகன் ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கார்த்தி ,நகர துணைச் செயலாளர்



முத்துக்குமார், மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் அப்துல் காதர், மற்றும் காவல் கிளி, ஜலால் கார்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


### பொது அறிவிப்பு

புதுக்கோட்டை மாவட்டம். திருமயம் தாலுகா, பேரையூர் அஞ்சல், பிலாங்குடிப்பட்டி. க.எண்: 3/260-ல் வசித்து வரும் ராமகிருஷ்ணன் அவர்களின் மனைவி ராஜகுமாரி என்ற எமது கட்சிக்காரருக்காக கொடுத்த பொது அறிவிப்பு.

எமது கட்சிக்காரருக்கு பாத்தியப்பட்ட கீழ்கண்ட சொத்தை அடமானமாக வைத்து புதுக்கோட்டை ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிட்., வங்கியில் கடன் பெற உள்ளார். எனவே இது சம்பந்தமாக யாருக்காவது ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 7 தினங்களுக்குள் எனக்கோ அல்லது புதுக்கோட்டை கிளை ரெப்கோ ஹோம் பைனான்ஸ் லிட், கிளை வங்கி மேலாளருக்கோ தகவல் தெரிவிக்க வேண்டியது. மேற்கண்ட 7 தினங்களுக்குள் ஏதேனும் ஆட்சேபனைகள் கிடைக்க பெறாவிட்டால் கீழ்கண்ட சொத்திற்கு எமது கட்சிக்காரருக்கு மேற்படி வங்கியில் கடன் வழங்கப்படும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

### சொத்துவிபரம்

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் & தாலுகா, புதுக்கோட்டை பதிவு மாவட்டம், புதுக்கோட்டை துணைப்பதிவு அலுவலகம், பேரையூர் வட்டம், மல்லாங்குடி கிராமத்தில் பட்டா எண்: 409 கண்டதில் சர்வே எண்:149-28 புஞ்சை, 0.15.5 ஏர்ஸில் 0.04.0 ஏர்ஸ்க்கு 0.10 செண்டை ஏற்கனவே கிரையம் செய்து கொடுத்தது போக மீதம் உள்ள 0.11.5 ஏர்ஸ் உள்ளதில் தென்புறம் உள்ள 0.04.0 ஏர்ஸ்க்கு 0.10 செண்டுக்கு 400 சதுர மீட்டர் இந்த இனாம் செட்டில் மெண்டுக்கு கட்டுப்பட்டது.

### இதற்கு நான்கெல்லை விபரம்:-

| | | |
|---|---|---|
| கிழக்கில் - | தார் ரோடு | |
| மேற்கில் - | சர்வே எண்: | 149/28-ல் எனக்கு சொந்தமான இடம் |
| வடக்கில் - | சர்வே எண்: | 149/28-ல் எனக்கு சொந்தமான இடம் |
| தெற்கில் - | சின்னையா கோனாருக்கு சொந்தமான இடம் இதற்குட்பட்ட | |

புஞ்சை இடத்தில் கட்டப்பட்டுள்ள R.C.C. தார்சு வீடும் மேற்படி வீட்டில் உள்ள மின் இணைப்பு பிட்டிங்ஸ் லெட்ரின் & பாத்ரூம் உள்பட அதன் சகல பாத்தியங்களும், மின் இணைப்பு எண்:06-182-006-295 சொத்து வரிவிதிப்பு எண்: 653.

சி.அருச்சுனன் M.A., B.L.,
அட்வகேட்,
செல்: 9942811866




மதுரையில் அதிமுக சார்பில் நடைபெற்ற, வீர வரலாற்றின் பொன்விழா எழுச்சி மாநாட்டில், அரியலூர் மாவட்டம், ஆண்டிமடத்தை சேர்ந்தவரும், மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை செயலாளருமான டாக்டர். ரீடுசெல்வம் தலைமையில், ஓசை சண்முகம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# நீட் தேர்வை ரத்து செய்யாத மத்திய அரசை கண்டித்து திமுக உண்ணாவிரதப் போராட்டம்

## அரியலூரில் அமைச்சர் சிவசங்கர் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

அரியலூர், ஆக. 21-

நீட் தேர்வைரத்துசெய்யாத மத்திய அரசை கண்டித்து, திமுக சார்பில் அரியலூரில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தில், அமைச்சர் எஸ் எஸ் சிவசங்கர் உட்பட ஆயிரக்கணக்கானோர் பங்கேற்றனர்.



மாணவர்களையும், பெற்றோர்களையும் மரணக் குழியில் தள்ளும், நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசையும், பொறுப்பற்ற ஆளுநரையும் கண்டித்து, திமுக இளைஞரணி மாணவரணி, மருத்துவர் அணி சார்பில், மாநிலம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில், உண்ணாவிரதப் போராட்டம் நடத்தப்படும் என, திமுக சார்பில் அறிவிக்கப்பட்டது.

அதன்படி, அரியலூர் பழைய பேருந்து நிலையம் அருகே, செட்டி ஏரிக்கரையின் வடக்கு பகுதி கல்லங்குறிச்சி சாலையில், மிகப் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்ட பந்தலின் கீழ் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்திற்கு, திமுக மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ இளையராஜன் தலைமை வகித்தார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ராமராஜன் வரவேற்று பேசினார்.

இதில் திமுக அரியலூர் மாவட்டச் செயலாளரும், தமிழக போக்குவரத்து துறை அமைச்சருமான எஸ்.எஸ் சிவசங்கர், மாவட்ட அவைத் தலைவர் சிவ.மாணிக்கம், மாநில சட்ட திட்ட திருத்தக்குழு உறுப்பினர் சுபா.சந்திரசேகர், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், மாநிலக் கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பெறுநற்கிள்ளி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பாளை து. அமரமூர்த்தி, மாவட்ட துணை செயலாளர் அருங்கால் சந்திரசேகர், லதா பாலு, கணேசன், பொதுக்குழு உறுப்பினர்கள் பாலு, ஷாஜகான், சுமதி கருணாநிதி, ஜெயங்கொண்டம் நகர செயலாளர் கருணாநிதி,ஒன்றிய செயலாளர்கள் அரியலூர் அன்பழகன் அறிவழகன், தா பழூர் சௌந்தர்ராஜன், ஜெயங்கொண்டம் தனசேகர், மணிமாறன், ஆண்டிமடம் ரெங்க முருகன், கலியபெருமாள், செந்துறை எழில் மாறன், செல்வராஜ், திருமானூர் கென்னடி அசோக சக்கரவர்த்தி, அரியலூர் நகராட்சித் தலைவர் சாந்தி கலைவாணன் உடையார்பாளையம் பேரூராட்சி தலைவர் மலர்விழி ரஞ்சித் குமார், வரதராஜன் பேட்டை மார்கிரேட் அல்போன்ஸ், மற்றும் திமுக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி நிர்வாகிகள், திமுக உள்ளாட்சி பிரதிநிதிகள், ஏராளமான தொண்டர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் உண்ணாவிரத போராட்டத்தில் பங்கேற்றனர்.

# "எங்களை அழிக்க நினைக்காமல் திமுகவை காப்பாற்றிக் கொள்ளுங்கள்" - மதுரை அதிமுக மாநாட்டில் இபிஎஸ் எச்சரிக்கை

மதுரை , ஆக. 21-

"அதிமுகவை அழிக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். உங்கள் கட்சியை காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு, மதுரையில் நடந்த அதிமுக மாநாட்டில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் பழனிசாமி எச்சரிக்கை விடுத்துள்ளார்.



அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமி பொறுப்பேற்ற பிறகு அக்கட்சியின் முதல் மாநில மாநாடு மதுரை அருகே வலையங்குளத்தில் நேற்று நடந்தது. மக்களவைத் தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு மதுரையில் நடக்கும் இந்த மாநாட்டுக்கு 'அதிமுக வீர வரலாற்று பொன்விழா எழுச்சி மாநாடு' எனப் பெயரிட்டு இருந்தனர். தமிழகம் முழுவதும் இருந்து இந்த மாநாட்டில் லட்சக்கணக்கான நிர்வாகிகள், தொண்டர்கள் கலந்து கொண்டனர். அதனால், மாநாடு நடந்த 'ரிங்' ரோடு மட்டுமில்லாது மதுரையே திருவிழா போல் காணப்பட்டது. வாகனங்களில் வந்த தொண்டர்களால் மதுரை புறநகர் பகுதியில் ஒட்டுமொத்த போக்குவரத்தும் ஸ்தம்பித்தது.

திட்டமிட்டப்படி மாநாட்டு நுழைவு வாயிலில் 51 அடி கொடி கம்பத்தில் பொதுச்செயலாளர் பழனிசாமி அதிமுக கொடியேற்றி வைத்து மாநாட்டை தொடங்கி வைத்தார். அதன்பிறகு நிர்வாகிகள், தொண்டர்கள் வழங்கிய வரவேற்பை ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து மாநாட்டு பந்தலை திறந்து வைத்து, அதிமுகவின் 51 ஆண்டு கால வரலாற்று புகைப்பட கண்காட்சியை திறந்து வைத்து பார்வையிட்டு சென்றார். அதன்பிறகு நிர்வாகிகள், தொண்டர்களை மகிழ்விக்க மாலை வரை மேடையில் கலைநிகழ்ச்சிகள், பட்டிமன்றம், இன்னிசை கச்சேரி உள்ளிட்ட பல்வறு நிகழ்ச்சிகள் நடந்தது. மாலை 4.30 மணியளவில் மீண்டும் மேடைக்கு வந்த பழனிசாமி தலைமையில் மாநாடு தொடங்கியது. மாநாட்டு பொறுப்பாளர்களும், முன்னாள் அமைச்சர்களான செல்லூர் கே.ராஜூ, ஆர்பி. உதயகுமார், அமைப்பு செயலாளர் விவி.ராஜன் செல்லப்பா எம்எல்ஏ ஆகியோர் வரவேற்று பேசினர். அவர்களை தொடர்ந்து தலைமை நிலையை செயலாளர் எஸ்பி. வேலுமணி, பொருளாளர் திண்டுக்கல் சி.சீனிவாசன், துணைப்பொதுச்செயலாளர் நத்தம் ஆர்.விஸ்வநாதன், மூத்த தலைமை கழக நிர்வாகிகள் பேசினர். அவர்களை தொடர்ந்து அவைத்தலைவர் தமிழ் மகன் உசேன், துணைப்பொதுச்செயலாளர் கேபி.முனுசாமி ஆகியோர் பேசினர்.

அதன்பிறகு மாநாட்டில் சர்வ சமய பெரியவர்கள் சார்பில் 'புரட்சி தமிழர்' என்ற பட்டம் பொதுச்செயலாளர் பழனிசாமிக்கு வழங்கப்பட்டது. நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய இலக்கிய அணி செயலாளர் முன்னாள் அமைச்சர் வைகை செல்வன், ''இனி இந்த பட்டத்தில்தான் அவரை கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் பொதுச்செயலாளர் பழனிசாமியை அழைக்க வேண்டும், குறிப்பிட வேண்டும்'' என கேட்டுக் கொண்டார்.

மாநாட்டில் நிறைவு உரையாக பொதுச் செயலாளர் பழனிசாமி பேசியதாவது: 'புரட்சி தமிழர்' பட்டம் எனக்கு வழங்கிய சமய பெரியவர்கள், கட்சி முன்னோடி நிர்வாகிகளுக்கும், மாநாட்டிற்கு வருகை தந்த நிர்வாகிகள், தொண்டர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதிமுக ஒரு மாபெரும் இயக்கும். தமிழகத்திலே மிகப்பெரிய கட்சி அதிமுக. எம்ஜிஆர், 1972ம் ஆண்டில் அக்டோபர் 17ல் அதிமுகவை தொடங்கினார். இன்று அதிமுக 51ம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளது. 31 ஆண்டுகாலம் தமிழகத்தை அதிமுக ஆட்சி செய்துள்ள பெரிய கட்சியாக திகழ்கிறது. அதிமுக ஆட்சியால்தான் தமிழகம் ஏற்றம் பெற்றுள்ளது. கடைகோடியில் இருக்கிற சாமானியன் கூட நன்மை பெற்றுள்ளது.

2021 சட்டசபை பொதுத்தேர்தலில் முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் உதயநிதி போன்றோர் திமுக ஆட்சிக்கு வந்ததும், 'நீட்' ரத்து செய்வதற்கு முதல் கையெழுத்துப்போடப்படும் என கூறினர். ஆட்சிக்கு வந்து 2 ஆண்டாகியும் 'நீட்' தேர்வு ரத்துக்கு என்ன முயற்சி எடுத்தீர்கள். இதற்கு பதில் சொல்லுங்கள். மாணவர்களை ஏமாற்றாதீர்கள். 'நீட்'தேர்வை கொண்டு வந்தது திமுக. அதை தடுக்க போராடுவது அதிமுக. இவர்களை கொண்டு வந்துவிட்டு அதை ரத்து செய்வதற்கு நாடகம் ஆடுகிறார்கள். ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஒரு அரசாங்கம் என்று சொன்னால் அது திமுக அரசுதான். முன்னாள் திமுக அமைச்சர்கள் 13 பேர் மீது ஊழல் குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் வழக்கு நடக்கிறது. 13 ஆண்டு காலமாக வாய்தா வாங்கி வந்தார்கள். தற்போது திமுக ஆட்சிக்கு வந்ததும், அந்த வழக்கை அவசரம் அவசரமாக விசாரித்து 4 அமைச்சர்கள் அந்த வழக்கில் விடுமுறை ஆகியிருக்கிறார்கள். நாங்கள் சும்மா விட மாட்டோம். உச்ச நீதிமன்றம் சென்று வழக்கை தொடர்வோம்.

அதிமுகவை அழிக்க வேண்டும் என்று ஒருபோதும் நினைக்க வேண்டாம். உங்கள் கட்சியை காப்பாற்றிக் கொள்ளுங்கள். அதிமுக நிர்வாகிகள் மீது பொய் வழக்கு போடுகிறீர்கள். அனைத்தும் சட்டரீதியாக சென்று சட்டரீதியாக வெல்வோம். நான் ஒரு சாதாரண தொண்டன். ஒரு தொண்டன் கூட எம்எல்ஏ, எம்பி ஆகலாம். ஏன் முதலமைச்சராகலாம். ஒரு கிளைச்செயலாளராக இருந்து, ஒன்றிய பொறுப்புக்கு, மாவட்ட பொறுப்புக்கு வந்து மாநில பொறுப்புக்கு வந்து நிர்வாகிகள், தொண்டர்கள் ஆதரவுடன் தற்போது பொதுச்செயலாளராக வந்துள்ளேன். வேறு எந்த கட்சியிலாவது முடியுமா?


அதிமுகவில் மட்டுமே உழைக்கிற சாதாரண தொண்டன் கூட உச்சப்பட்ச பதவிக்கு வர முடியும். இதுவரை எந்த மாநாட்டிற்கு இதுபோல் 15 லட்சம் தொண்டர்கள், மக்கள் வந்தில்லை. அந்த சரித்திர சாதனையை நிர்வாகிகள், தொண்டர்கள் ஏற்படுத்தி தந்துள்ளீர்கள்" என்று அவர் பேசினார்.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# 2024 தேர்தல்: இண்டியா கூட்டணி வென்றால் தமிழகத்தில் நீட் இருக்காது

# செருப்படி பேச்சு: அமைச்சரவையிலிருந்து உதயநிதியை நீக்க பாஜக வலியுறுத்தல்





# எங்களை அழிக்க நினைக்காமல் திமுகவை காப்பாற்றிக்கொள்ளுங்கள்

சென்னை / புதுக்கோட்டை | 21.08.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ப. ஜீவானந்தம் , இந்தியப் பொதுவுடமைவாதி (பி.1907) (இ.1963)



சுஜித் முக்கர்ஜி , இந்திய எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் (பி.1930) (இ.2003)



ம. வே. பசுபதி , தமிழக எழுத்தாளர், தமிழறிஞர் (பி.1942) (இ.2022)



உசேன் போல்ட் , யமைக்கா ஓட்டவீரர் (பி.1986)



## இன்றைய நினைவு நாள்

காகா காலேல்கர் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1895) (இ.1981)



சுப்பிரமணியன் சந்திரசேகர் , நோபல் பரிசு பெற்ற இந்திய இயற்பியலாளர் (பி.1910) (இ.1995)



சச்சிதானந்த ராவுத்ராய் , இந்திய ஒரியக் கவிஞர் (பி.1916) (இ.2004)

